DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 161/2023 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **திருமதி. விஜயா** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிவல்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் காயம்பட்ட சாட்சி காசிநாதன் எனது கணவர் ஆவார். சாட்சி போஸ் எனது பங்காளி ஆவார். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி வெள்ளைச்சாமி என்பவர் எனது சின்ன மாமனார் ஆவார். எதிரி சோனைமுத்து எதிரி வெள்ளைச்சாமியின் மகன் ஆவார். கடந்த 03.12.2022 ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும் எனது கணவர் காசிநாதன் என்பவரும் கட்டையன்நடப்பு என்ற இடத்தில் உள்ள எங்களது வயலுக்கு சென்றோம். அந்த இடத்தில் நாங்கள் வரப்பு வெட்டிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி வெள்ளைச்சாமியின் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவர் அங்கு வந்து வரப்பை வெட்டி இங்கு போடக்கூடாது என்றுசொல்லி எங்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்.

2. பின்பு முத்துக்கிருஷ்ணன் எதிரிகளை அழைத்து வருவதாக சொல்லி சென்றுவிட்டார். அதன்பிறகு அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் நாங்கள் எங்களது வயலில் வேலை பார்த்து கொண்டிருந்தோம். எதிரிகள் இருவரும் அங்கு வந்து ஏன்டா என் தம்பியை பேசினாய் என்று எங்களை கேட்டு எதிரி வெள்ளைச்சாமி அருவாளை எடுத்து வந்தார். எதிரி சோனைமுத்து கத்தியை எடுத்து வந்தார். அதன்பிறகு எதிரி சோனைமுத்து கத்தியால் என் கணவரை வலது பக்க நெஞ்சில் குத்தினார் மேலும் என் கணவரின் வலதுபக்க தொடையிலும் குத்தினார்.

3. எதிரி வெள்ளைச்சாமி அருவாளால் என் கணவரை வெட்ட வந்தபோது அவர் கையால் தடுத்த போது அது என் கணவரின் வலது பக்க கையில் பட்டு காயம் ஏற்பட்டது. வலது பக்க தொடையிலும் எதிரி வெள்ளைச்சாமி அருவாளல் என் கணவரை வெட்டினார். மேலும் எதிரிகள் இருவரும் செத்து தொலைடா என்று சொன்னார்கள். பின்பு அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்த போஸ் என்பவர் வந்தார். பின்பு போஸ் சண்டையை விலக்கிவிட்டார். என் கணவருக்கு நெஞ்சு, தொடை, கை ஆகிய இடங்களில் ரத்தக்காயங்கள் ஏற்பட்டதால் நான் என் கணவரை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். என் கணவர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் மயக்க நிலையில் இருந்ததால் சிவகங்கை போலிசார் வந்து என்ன நடந்தது என்று என்னிடம் விசாரித்து எழுதினார்கள்.

4. பின்பு அதை படித்து காண்பித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள விஜயா என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். அதன்பிறகு என் கணவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தி எதிரி சோனைமுத்து என் கணவரை தாக்க பயன்படுத்தியதாகும். அந்த **கத்தி அ.த.பொ.சா.1** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் எதிரி வெள்ளைச்சாமி என் கணவரை தாக்க பயன்படுத்தியதாகும்.

அந்த அருவாள் **அ.த.பொ.சா.2** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** :

வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 15:49:51 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**